







श्रीमत् वेदान्त रामानुज मुनि करु[ालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मो]ाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करु[ालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मो]ाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्म[ मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्म[मुनिम् शर[ प्रपद्ये

# கோவில் திருவாய்மொழி

*kOvil thiruvAymozhi*

கோவில் திருவாய்மொழி

தனியன்

**ஸ்ரீ நாதமுனிகள் அருளிச்செய்த**

भक्तामृतम् विश्वजनानुमोदनम् - सर्वार्थदं श्रीशटकोपवाङ्मयम् ।

सहस्त्र शाख़ उपनिषत् समागमम् - नमाम्यहं द्राविड वेदसागरम् ॥

**ஸ்ரீ ஈஸ்வரமுனிகள் அருளிச்செய்த**

திருவழுதி நாடென்றும் தெண் குருகூர் என்றும்
மருவினிய வண்பொருநல் என்றும்
அருமறைகள் அந்தாதி செய்தான் அடியிணையே
எப்பொழுதும் சிந்தியாய் நெஞ்சே தெளிந்து

**ஸ்ரீ சொட்டை நம்பிகள் அருளிச்செய்த**

மனத்தாலும் வாயாலும் வண் குருகூர் பேணும்
இனத்தாரையல்லா திறைஞ்சேன்
தனத்தாலும் ஏதும் குறைவிலேன்
எந்தை சடகோபன் பாதங்கள் யாமுடைய பற்று

**ஸ்ரீ அனந்தாழ்வான் அருளிச்செய்த**

ஏய்ந்தபெரும் கீர்த்தி இராமானுச முனி தன்
வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன்
ஆய்ந்த பெரும் சீரார் சடகோபன்
செந்தமிழ் வேதம் தரிக்கும் பேராத உள்ளம் பெற

## கோவில் திருவாய்மொழி

### ஸ்ரீ பட்டர் அருளிச்செய்த

வான் திகழும் சோலை மதிள் அரங்கர் வண் புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும்
ஈன்ற முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமுனுசன்

மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும்
தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர் கோன்
யாழினிசை வேதத் தியல்

### ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த கோவில் திருவாய்மொழி

***உயர்வற உயர் நலம்***
***உடையவன் யவன் அவன்***
***மயர்வற மதி நலம்***
***அருளினன் யவன் அவன்***
***அயர்வறும் அமரர்கள்***
***அதிபதி யவன் அவன்***
***துயர் அறு சுடரடி***
***தொழுது எழு என் மனனே*** [1.1.1] [2791]

மனன் அகம் மலம் அற
மலர் மிசை எழுதரும்
மனன் உணர் வளவிலன்
பொறி உணர்வு அவை இலன்
இனன் உணர் முழு நலம்
எதிர் நிகழ் கழிவினும்
இனன் இலன் எனன் உயிர்
மிகு நரை இலனே [1.1.2] [2792]

இலன் அது உடையன் இது
என நினைவு அரியவன்
நிலனிடை விசும்பிடை
உருவினன் அருவினன்
புலனொடு புலன் அலன்
ஒழிவிலன் பரந்த
அந்நலன் உடை ஒருவனை
நணுகினம் நாமே [1.1.3] [2793]

நாம் அவன் இவன் உவன்
அவள் இவள் உவள் எவள்
தாம் அவர் இவர் உவர்
அது இது உது எது
வீம் அவை இவை உவை
அவை நலம் தீங்கவை
ஆம் அவை ஆயவை ஆய்
நின்ற அவரே [1.1.4] [2794]

அவரவர் தமதமது
அறிவு அறி வகை வகை
அவரவர் இறையவர்
என அடி அடைவர்கள்
அவரவர் இறையவர்
குறைவு இலர் இறையவர்
அவரவர் விதிவழி
அடைய நின்றனரே [1.1.5] [2795]

நின்றனர் இருந்தனர்
கிடந்தனர் திரிந்தனர்
நின்றிலர் இருந்திலர்
கிடந்திலர் திரிந்திலர்
என்றும் ஓர் இயல்வினர்
என நினைவு அரியவர்
என்றும் ஓர் இயல்வொடு
நின்ற எம் திடரே [1.1.6] [2796]

திட விசும்பு எரி வளி
நீர் நிலம் இவை மிசை
படர் பொருள் முழுவதுமாய்
அவை அவைதொறும்
உடல் மிசை உயிர் எனக்
கரந்து எங்கும் பரந்துளன்
சுடர் மிகு சுருதியுள்
இவை உண்ட சுரனே [1.1.7] [2797]

சுரர் அறிவு அரு நிலை
விண் முதல் முழுவதும்
வரன் முதலாய் அவை
முழுது உண்ட பர பரன்
புரம் ஒரு மூன்று எரித்து
அமரர்க்கும் அறிவியந்து
அரன் அயன் என
உலகு அழித்து அமைத்து உளனே [1.1.8] [2798]

உளன் எனில் உளன்
　　அவன் உருவம் இவ் உருவுகள்
உளன் அலன் எனில்
　　அவன் அருவம் இவ் அருவுகள்
உளன் என இலன் என
　　இவை குணம் உடைமையில்
உளன் இரு தகைமையொடு
　　ஒழிவு இலன் பரந்தே [1.1.9] [2799]

பரந்த தண் பரவையுள்
　　நீர் தொறும் பரந்துளன்
பரந்த அண்டம் இதென
　　நில விசும்பு ஒழிவு அற
கரந்த சில் இடந்தொறும்
　　இடந்திகழ் பொருள் தொறும்
கரந்து எங்கும் பரந்துளன்
　　இவை உண்ட கரனே [1.1.10] [2800]

*கர விசும்பு எரி வளி*
　　*நீர் நிலம் இவை மிசை*
*வரன் நவில் திறல் வலி*
　　*அளி பொறையாய் நின்ற*
*பரன் அடிமேல்*
　　*குருகூர் சடகோபன் சொல்*
*நிரல் நிறை ஆயிரத்து*
　　***இவை பத்தும் வீடே*** [1.1.11] [2801]

***வீடுமின் முற்றவும்***
***வீடுசெய்து***
***உம்முயிர் வீடுடை யான் இடை***
***வீடுசெய்ம்மினே*** [1.2.1] [2802]

மின்னின் நிலை இல
மன் உயிர் ஆக்கைகள்
என்னும் இடத்து
இறை உன்னுமின் நீரே [1.2.2] [2803]

நீர் நுமது என்று இவை
வேர் முதல் மாய்த்து
இறை சேர்மின் உயிர்க்கு
அதன் நேர் நிறை இல்லே [1.2.3] [2804]

இல்லதும் உள்ளதும்
அல்லது அவன் உரு
எல்லை இல் அந்நலம்
புல்கு பற்றற்றே [1.2.4] [2805]

அற்றது பற்று எனில்
உற்றது வீடு உயிர்
செற்றது மன் உறில்
அற்று இறை பற்றே [1.2.5] [2806]

பற்று இலன் ஈசனும்
முற்றவும் நின்றனன்
பற்று இலையாய்
அவன் முற்றில் அடங்கே [1.2.6] [2807]

அடங்கு எழில் சம்பத்து
அடங்கக் கண்டு
ஈசன் அடங்கு எழில் அஃது என்று
அடங்குக உள்ளே [1.2.7] [2808]

உள்ளம் உரை செயல்
உள்ள இம் மூன்றையும்
உள்ளிக் கெடுத்து
இறை உள்ளில் ஒடுங்கே [1.2.8] [2809]

ஒடுங்க அவன் கண்
ஒடுங்கலும் எல்லாம்
விடும் பின்னும் ஆக்கை
விடும்பொழுது எண்ணே [1.2.9] [2810]

எண் பெருக்கந் நலத்து
ஒண் பொருள் ஈறில
வண் புகழ் நாரணன்
திண் கழல் சேரே [1.2.10] [2811]

*சேர்த்தடத்*
*தென் குருகூர்ச் சடகோபன் சொல்*
*சீர்த் தொடை ஆயிரத்து*
*ஓர்த்த இப் பத்தே* [1.2.11] [2812]

*கிளர் ஒளி இளமை*
*கெடுவதன் முன்னம்*
*வளர் ஒளி மாயோன்*
*மருவிய கோயில்*
*வளர் இளம் பொழில் சூழ்*
*மாலிருஞ்சோலை*
*தளர்வு இலர் ஆகில்*
*சார்வது சதிரே* [2.10.1] [3002]

சதிர் இள மடவார்
தாழ்ச்சியை மதியாது
அதிர் குரல் சங்கத்து
அழகர் தம் கோயில்
மதி தவழ் குடுமி
மாலிருஞ்சோலை
பதியது ஏத்தி
எழுவது பயனே [2.10.2] [3003]

பயன் அல்ல செய்து
பயன் இல்லை நெஞ்சே
புயல் மழை வண்ணர்
புரிந்து உறை கோயில்
மயல் மிகு பொழில் சூழ்
மாலிருஞ்சோலை
அயன் மலை அடைவது
அது கருமமே [2.10.3] [3004]

கரும வன் பாசம்
கழித்து உழன்று உய்யவே
பெரு மலை எடுத்தான்
பீடு உறை கோயில்
வரு மழை தவழும்
மாலிருஞ்சோலை
திருமலை அதுவே
அடைவது திறமே [2.10.4] [3005]

திறம் உடை வலத்தால்
தீவினை பெருக்காது
அறம் உயல் ஆழிப்
படையவன் கோயில்
மறுவில் வண் சுனை சூழ்
மாலிருஞ்சோலை
புறமலை சாரப்
போவது கிறியே [2.10.5] [3006]

கிறி யென நினைமின்
கீழ்மை செய்யாதே
உறி அமர் வெண்ணெய்
உண்டவன் கோயில்
மறியொடு பிணை சேர்
மாலிருஞ்சோலை
நெறி பட அதுவே
நினைவது நலமே [2.10.6] [3007]

நலம் என நினைமின்
நரகம் அழுந்தாதே
நில முனம் இடந்தான்
நீடு உறை கோயில்
மலம் அறு மதி சேர்
மாலிருஞ்சோலை
வல முறை எய்தி
மருவுதல் வலமே [2.10.7] [3008]

வலம் செய்து வைகல்
வலம் கழியாதே
வலம் செய்யும் ஆய
மாயவன் கோயில்
வலம் செய்யும் வானோர்
மாலிருஞ்சோலை
வலம் செய்து நாளும்
மருவுதல் வழக்கே [2.10.8] [3009]

வழக்கு என நினைமின்
வல்வினை மூழ்காது
அழக்கொடி அட்டான்
அமர் பெருங்கோயில்
மழக் களிற்று இனம் சேர்
மாலிருஞ்சோலை
தொழக் கருதுவதே
துணிவது சூதே [2.10.9] [3010]

சூது என்று களவும்
சூதும் செய்யாதே
வேத முன் விரித்தான்
விரும்பிய கோயில்
மாது உறு மயில் சேர்
மாலிருஞ்சோலை
போதவிழ் மலையே
புகுவது பொருளே [2.10.10] [3011]

*பொருள் என்று இவ் உலகம்*
*படைத்தவன் புகழ்மேல்*
*மருளில் வண் குர்கூர்*
*வண் சடகோபன்*
*தெருள் கொள்ளச் சொன்ன*
*ஓர் ஆயிரத்துள் இப்பத்து*
*அருள் உடையவன் தாள்*
***அணைவிக்கும் முடித்தே*** [2.10.11] [3012]

***ஒழிவில் காலம் எல்லாம்***
***உடனாய் மன்னி***
***வழுவிலா அடிமை***
***செய்ய வேண்டும் நாம்***
***தெழி குரல் அருவித்***
***திருவேங்கடத்து***
***எழில் கொள் சோதி***
***எந்தை தந்தை தந்தைக்கே*** [3.3.1] [3035]

எந்தை தந்தை தந்தை
தந்தை தந்தைக்கும் முந்தை
வானவர்
வானவர் கோனொடும்
சிந்து பூ மகிழும்
திருவேங்கடத்து
அந்த மில் புகழ்க்
கார் எழில் அண்ணலே [3.3.2] [3036]

அண்ணல் மாயன்
அணி கொள் செந்தாமரைக் கண்ணன்
செங்கனி வாய்க்
கருமாணிக்கம்
தெண்ணிறைச் சுனை நீர்த்
திருவேங்கடத்து
எண்ணில் தொல் புகழ்
வானவர் ஈசனே [3.3.3] [3037]

ஈசன் வானவர்க்கு
என்பன் என்றால்
அது தேசமோ
திருவேங்கடத்தானுக்கு
நீசனேன்
நிறைவு ஒன்றும் இலேன்
என் கண் பாசம் வைத்த
பரம் சுடர்ச் சோதிக்கே [3.3.4] [3038]

சோதி ஆகி
எல்லா உலகும் தொழும்
ஆதி மூர்த்தி என்றால்
அளவு ஆகுமோ
வேதியர்
முழு வேதத்து அமுதத்தை
தீதில் சீர்த்
திருவேங்கடத்தானையே [3.3.5] [3039]

வேங்கடங்கள்
மெய்மேல் வினை முற்றவும்
தாங்கள் தங்கட்கு
நல்லனவே செய்வார்
வேங்கடத்து உறைவார்க்கு
நம என்னல் ஆம் கடமை
அது சுமந்தார்கட்கே [3.3.6] [3040]

சுமந்து மாமலர்
நீர் சுடர் தூபம் கொண்டு
அமர்ந்து வானவர்
வானவர் கோனொடும்
நமன்று எழும்
திருவேங்கடம் நங்கட்கு
சமன் கொள் வீடு தரும்
தடங்குன்றமே [3.3.7] [3041]

***குன்றம் ஏந்திக்***
***குளிர் மழை காத்தவன்***
***அன்று ஞாலம்***
***அளந்த பிரான்***
***பரன் சென்று சேர்***
***திருவேங்கட மா மலை***
***ஒன்றுமே தொழ***
***நம் வினை ஓயுமே*** [3.3.8] [3042]

ஓயு மூப்புப்
பிறப்பு இறப்பு பிணி
வீயுமாறு செய்வான்
திருவேங்கடத்தாயன்
நாள் மலராம்
அடித் தாமரை
வாயுள்ளும் மனத்துள்ளும்
வைப்பார்கட்கே [3.3.9] [3043]

வைத்த நாள் வரை
எல்லை குறுகிச் சென்று
எய்த்து இளைப்பதன்
முன்னம் அடைமினோ
பைத்த பாம்பு அணையான்
திருவேங்கடம்
மொய்த்த சோலை
மொய் பூந்தடம் தாழ்வரே [3.3.10] [3044]

*தாள் பரப்பி*
*மண் தாவிய ஈசனை*
*நீள் பொழில்*
*குருகூர்ச் சடகோபன் சொல்*
*கேழில் ஆயிரத்து*
*இப்பத்தும் வல்லவர்*
*வாழ்வர் வாழ்வு எய்தி*
*ஞாலம் புகழவே* [3.3.11] [3045]

*ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும்*
*யாதும் இல்லா அன்று*
*நான்முகன் தன்னொடு*
*தேவர் உலகோடு உயிர் படைத்தான்*
*குன்றம் போல் மணி மாடம் நீடு*
*திருக்குருகூர் அதனுள்*
*நின்ற ஆதிப்பிரான் நிற்க*
*மற்றைத் தெய்வம் நாடுதிரே* [4.10.1] [3222]

நாடி நீர் வணங்கும் தெய்வமும்
உம்மையும் முன் படைத்தான்
வீடில் சீர்ப் புகழ் ஆதிப்பிரான்
அவன் மேவி உறை கோயில்
மாட மாளிகை சூழ்ந்து அழகு ஆய
திருக்குருகூர் அதனைப்
பாடி ஆடிப் பரவிச் செல்மின்கள்
பல் உலகீர் பரந்தே [4.10.2] [3223]

பரந்த தெய்வமும் பல் உலகும் படைத்து
அன்றுடனே விழுங்கிக்
கரந்து உமிழ்ந்து கடந்து இடந்தது
கண்டும் தெளியகில்லீர்
சிரங்களால் அமரர் வணங்கும்
திருக்குருகூர் அதனுள்
பரன் திறம் அன்றிப் பல் உலகீர்
தெய்வம் மற்றில்லை பேசுமினே [4.10.3] [3224]

பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும்
பிறர்க்கும் நாயகன் அவனே
கபாலநன் மோக்கத்துக்
கண்டு கொள்மின்
தேச மா மதிள் சூழ்ந்து அழகு ஆய
திருக்குருகூர் அதனுள்
ஈசன்பால் ஓர் அவம் பறைதல்
என் ஆவது இலிங்கியர்க்கே [4.10.4] [3225]

*இலிங்கத்து இட்ட புராணத் தீரும்*
*சமணரும் சாக்கியரும்*
*வலிந்து வாது செய்வீர்களும்*
*மற்று நும் தெய்வமும் ஆகி நின்றான்*
*மலிந்து செந்நெல் கவரி வீசும்*
*திருக்குருகூர் அதனுள்*
*பொலிந்து நின்ற பிரான் கண்டீர்*
*ஒன்றும் பொய் இல்லை போற்றுமினே* [4.10.5] [3226]

போற்றி மற்றோர் தெய்வம்
பேணப் புறத்திட்டு
உம்மை யின்னே தேற்றி வைத்தது
எல்லீரும் வீடு பெற்றால் உலகு இல்லை என்றே
சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு
திருக்குருகூர் அதனுள்
ஆற்ற வல்லவன் மாயம் கண்டீர்
அது அறிந்து அறிந்து ஓடுமினே [4.10.6] [3227]

ஓடி ஓடிப் பல் பிறப்பும் பிறந்து
மற்றோர் தெய்வம்
பாடி ஆடிப் பணிந்து பல்படி கால்
வழியேறிக் கண்டீர்
கூடி வானவர் ஏத்த நின்ற
திருக்குருகூர் அதனுள்
ஆடு புட்கொடி ஆதி மூர்த்திக்கு
அடிமை புகுவதுவே [4.10.7] [3228]

புக்கு அடிமையினால் தன்னைக கண்ட
மார்க்கண்டேயன் அவனை
நக்க பிரானும் அன்று உய்யக் கொண்டது
நாராயணன் அருளே
கொக்கலர் தடந்தாழை வேலித்
திருக்குருகூர் அதனுள்
மிக்க ஆதிப்பிரான் நிற்க
மற்றைத் தெய்வம் விளம்புதிரே [4.10.8] [3229]

விளம்பும் ஆறு சமயமும்
அவை ஆகியும் மற்றும் தன்பால்
அளந்து காண்டற்கு அரியன் ஆகிய
ஆதிப்பிரான் அமரும்
வளங்கொள் தண்பணை சூழ்ந்து அழகு ஆய
திருக்குருகூர் அதனை
உளங்கொள் ஞானத்து வைம்மின்
உம்மை உய்யக் கொண்டு போகுறிலே [4.10.9] [3230]

உறுவது ஆவது எத் தேவும்
எவ் உலகங்களும் மற்றும் தன்பால்
மறுவில் மூர்த்தியோடு ஒத்து
இத்தனையும் நின்ற வண்ணம் நிற்கவே
செறுவில் செந்நெல் கரும்பொடு ஓங்கு
திருக்குருகூர் அதனுள்
குறிய மாண் உருவாகிய
நீள் குடக்கூத்தனுக்கு ஆள் செய்வதே [4.10.10] [3231]

*ஆட் செய்த ஆழிப் பிரானைச் சேர்ந்தவன்*
*வண் குருகூர் நகரான்*
*நாட் கமழ் மகிழ் மாலை மார்பினன்*
*மாறன் சடகோபன்*
*வேட்கையால் சொன்ன பாடல்*
*ஆயிரத்துள் இப்பத்தும் வல்லார்*
*மீட்சி இன்றி வைகுந்த மாநகர்*
*மற்றது கையதுவே* [4.10.11] [3232]

***ஆரா அமுதே அடியேன் உடலம்***
***நின்பால் அன்பாயே***
***நீராய் அலைந்து கரைய***
***உருக்குகின்ற நெடுமாலே***
***சீரார் செந்நெல் கவரி வீசும்***
***செழு நீர்த் திருகுடந்தை***
***ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்***
***கண்டேன் எம்மானே*** [5.8.1] [3310]

எம்மானே என் வெள்ளை மூர்த்தி
என்னை ஆள்வானே
எம்மா உருவும் வேண்டும் ஆற்றால்
ஆவாய் எழில் ஏறே
செம்மா கமலம் செழுநீர் மிசைக் கண் மலரும்
திருக்குடந்தை
அம்மா மலர்க்கண் வளர்கின்றானே
என் நான் செய்கேனே [5.8.2] [3311]

என் நான் செய்கேன் யாரே களைகண்
என்னை என் செய்கின்றாய்
உன்னால் அல்லால் யாவராலும்
ஒன்றும் குறை வேண்டேன்
கன்னார் மதிள் சூழ் குடந்தைக் கிடந்தாய்
அடியேன் அரு வாழ்நாள்
சென்னாள் எந்நாள் அந்நாள்
உனதாள் பிடித்தே செலக்காணே [5.8.3] [3312]

செலக் காண்கிற்பார் காணும் அளவும்
செல்லும் கீர்த்தியாய்
உலப்பு இலானே எல்லா உலகும் உடைய
ஒரு மூர்த்தி
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்
உன்னைக் காண்பான் நான் அலப்பாய்
ஆகாசத்தை நோக்கி
அழுவன் தொழுவனே [5.8.4] [3313]

அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன்
பாடி அலற்றுவன்
தழுவல் வினையால் பக்கம் நோக்கி
நாணிக் கவிழ்ந்திருப்பன்
செழுவொண் பழனக் குடந்தைக் கிடந்தாய்
செந்தாமரைக் கண்ணா
தொழுவனேனை உனதாள் சேரும்
வகையே சூழ் கண்டாய் [5.8.5] [3314]

சூழ் கண்டாய் என் தொல்லை வினையை அறுத்து
உன் அடி சேரும் ஊழ் கண்டிருந்தே
தூராக்குழி தூர்த்து
எனை நாள் அகன்றிருப்பன்
வாழ் தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்
வானோர் கோமானே
யாழின் இசையே அமுதே
அறிவின் பயனே அரியேறே [5.8.6] [3315]

அரியேறே என் அம் பொற் சுடரே
செங்கண் கரு முகிலே
எரியே பவளக் குன்றே
நால் தோள எந்தாய் உனதருளே
பிரியா அடிமை என்னைக் கொண்டாய்
குடந்தைத் திருமாலே
தரியேன் இனி உன் சரணம் தந்து
என் சன்மம் களையாயே [5.8.7] [3316]

களைவாய் துன்பம் களையாது ஒழிவாய்
களை கண் மற்றிலேன்
வளை வாய் நேமிப் படையாய்
குடந்தைக் கிடந்த மா மாயா
தளரா உடலம் எனது ஆவி
சரிந்து போம்போது
இளையாது உனதாள் ஒருங்கப் பிடித்து
போத இசை நீயே [5.8.8] [3317]

இசைவித்து என்னை உன் தாள் இணைக் கீழ்
இருத்தும் அம்மானே
அசைவில் அமரர் தலைவர் தலைவா
ஆதி பெரு மூர்த்தி
திசை வில் வீசும் செழு மா மணிகள் சேரும்
திருக்குடந்தை
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய்
காண வாராயே [5.8.9] [3318]

*வாரா அருவாய் வரும் என் மாயா*
*மாயா மூர்த்தியாய்*
*ஆரா அமுதாய் அடியேன் ஆவி*
*அகமே தித்திப்பாய்*
*தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய்*
*திருக்குடந்தை ஊரா*
*உனக்கு ஆட்பட்டும்*
***அடியேன் இன்னம் உழல்வேனோ*** [5.8.10] [3319]

*உழலை என்பின் பேய்ச்சி முலையூடு*
*அவளை உயிர் உண்டான்*
*கழல்கள் அவையே சரணாகக் கொண்ட*
*குருகூர்ச் சடகோபன்*
*குழலின் மலியச் சொன்ன*
*ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்*
*மழலை தீர வல்லார்*
***காமர் மான் ஏய் நோக்கியர்க்கே*** [5.8.11] [3320]

*உலகம் உண்ட பெருவாயா*
*உலப்பில் கீர்த்தி அம்மானே*
*நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி*
*நெடியாய் அடியேன் ஆருயிரே*
*திலதம் உலகுக்காய் நின்ற*
*திருவேங்கடத்து எம் பெருமானே*
*குல தொல் அடியேன் உன் பாதம்*
*கூடுமாறு கூறாயே* [6.10.1] [3442]

கூறாய் நீறாய் நிலன் ஆகிக்
கொடுவல் அசுரர் குலம் எல்லாம்
சீறா எறியும் திரு நேமி வலவா
தெய்வக் கோமானே
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும்
திருவேங்கடத்தானே
ஆறா அன்பில் அடியேன்
உன் அடிசேர் வண்ணம் அருளாயே [6.10.2] [3443]

வண்ணம் அருள் கொள் அணி மேக வண்ணா
மாய அம்மானே
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே
இமையோர் அதிபதியே
தெண்ணல் அருவி மணி பொன் முத்து அலைக்கும்
திருவேங்கடத்தானே
அண்ணலே உன் அடி சேர
அடியேற்க்கு ஆவா என்னாயே [6.10.3] [3444]

ஆவா என்னாது உலகத்தை அலைக்கும்
அசுரர் வாணாள்மேல்
தீவாய் வாளி மழை பொழிந்த சிலையா
திரு மா மகள் கேள்வா தேவா
சுரர்கள் முனிக் கணங்கள் விரும்பும்
திருவேங்கடத்தானே
பூவார் கழல்கள் அருவினையேன்
பொருந்து மாறு புணராயே [6.10.4] [3445]

புணரா நின்ற மரம் ஏழ்
அன்றெய்த ஒருவில் வலவா ஓ
புணர் ஏய் நின்ற மரம் இரண்டின்
நடுவே போன முதல்வா ஓ
திணர் ஆர் மேகம் எனக் களிறு சேரும்
திருவேங்கடத்தானே
திணர் ஆர் சார்ங்கத்து உன பாதம்
சேர்வது அடியேன் எந்நாளே [6.10.5] [3446]

எந்நாளே நாம் மண் அளந்த
இணைத் தாமரைகள் காண்பதற்கு என்று
எந்நாளும் நின்று இமையோர்கள் ஏத்தி
இறைஞ்சி இனம் இனமாய்
மெய்ந் நா மனத்தால் வழிபாடு செய்யும்
திருவேங்கடத்தானே
மெய்ந் நாண் எய்தி எந்நாள்
உன் அடிக்கண் அடியேன் மேவுவதே [6.10.6] [3447]

அடியேன் மேவி அமர்கின்ற அமுதே
இமையோர் அதிபதியே
கொடியா அடு புள் உடையானே
கோலக் கனிவாய்ப் பெருமானே
செடியார் வினைகள் தீர் மருந்தே
திருவேங்கடத்து எம் பெருமானே
நொடியார் பொழுதும் உன பாதம்
காண நோலாது ஆற்றேனே [6.10.7] [3448]

நோலாது ஆற்றேன் உன பாதம்
காண என்று நுண் உணர்வில்
நீலார் கண்டத்து அம்மானும்
நிறை நான்முகனும் இந்திரனும்
சேலேய் கண்ணார் பலர் சூழ விரும்பும்
திருவேங்கடத்தானே
மாலாய் மயக்கி அடியேன் பால்
வந்தாய் போலே வாராயே [6.10.8] [3449]

வந்தாய் போலே வாராதாய்
    வாராதாய் போல் வருவானே
செந்தாமரைக் கண் செங்கனி வாய்
    நால் தோள் அமுதே எனது உயிரே
சிந்தாமணிகள் பகர் அல்லைப் பகல் செய்
    திருவேங்கடத்தானே
அந்தோ அடியேன் உன பாதம்
    அகலகில்லேன் இறையுமே [6.10.9] [3450]

*அகலகில்லேன் இறையும் என்று*
    *அலர்மேல் மங்கை உறை மார்பா*
*நிகரில் புகழாய் உலகம் மூன்று உடையாய்*
    *என்னை ஆள்வானே*
*நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும்*
    *திருவேங்கடத்தானே*
*புகல் ஒன்றில்லா அடியேன்*
    *உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே* [6.10.10] [3451]

*அடிக்கீழ் அமர்ந்து புகுந்து*
    *அடியீர் வாழ்மின் என்று என்று அருள் கொடுக்கும்*
*படிக் கேழ் இல்லாப் பெருமானைப்*
    *பழனக் குருகூர்ச் சடகோபன்*
*முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்*
    *திருவேங்கடத்துக்கு இவை பத்தும்*
*பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து*
    *பெரிய வானுள் நிலாவுவரே* [6.10.11] [3452]

***கங்குலும் பகலும் கண் துயில் அறியாள்***
***கண்ண நீர் கைகளால் இறைக்கும்***
***சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பும்***
***தாமரைக் கண் என்றே தளரும்***
***எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டென்னும்***
***இரு நிலம் கை துழாவிருக்கும்***
***செங்கயல் பாய் நீர்த் திருவரங்கத்தாய்***
***இவள் திறத்து இன் செய்கின்றாயே*** [7.2.1] [3464]

என் செய்கின்றாய் என் தாமரைக் கண்ணா என்னும்
கண்ணீர் மல்க இருக்கும்
என் செய்கேன் எறி நீர்த் திருவரங்கத்தாய் என்னும்
வெவ்வுயிர்த்து உயிர்த்து உருகும்
முன் செய்த வினையே முகப்படாய் என்னும்
முகில்வண்ணா தகுவதோ என்னும்
முன் செய்து இவ்வுலகம் உண்டு உமிழந்து அளந்தாய்
எங்கொலோ முடிகின்றது இவட்கே [7.2.2] [3465]

வட்கிலள் இறையும் மணிவண்ணா என்னும்
வானமே நோக்கும் மையாக்கும்
உட்குடை அசுரர் உயிர் எல்லாம் உண்ட
ஒருவனே என்னும் உள் உருகும்
கட்கிலீ உன்னைக் காணுமாறு அருளாய்
காகுத்தா கண்ணனே என்னும்
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்
இவள் திறத்து என் செய்திட்டாயே [7.2.3] [3466]

இட்ட கால் இட்ட கைகளாய் இருக்கும்
எழுந்துலாய் மயங்கும் கை கூப்பும்
கட்டமே காதல் என்று மூர்ச்சிக்கும்
கடல்வண்ணா கடியைகாண் என்னும்
வட்ட வாய் நேமி வலங்கையா என்னும்
வந்திடாய் என்று என்றே மயங்கும்
சிட்டனே செழு நீர்த் திருவரங்கத்தாய்
இவள் திறத்து என் சிந்தித்தாயே [7.2.4] [3467]

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும்
திருவரங்கத்து உள்ளாய் என்னும் வந்திக்கும்
ஆங்கே மழைக் கண் நீர் மல்க
வந்திடாய் என்று என்றே மயங்கும்
அந்திப் போது அவுணன் உடல் இடந்தானே
அலை கடல் கடைந்த ஆர் அமுதே
சந்தித்து உன் சரணம் சார்வதே வலித்த
தையலை மையல் செய்தானே [7.2.5] [3468]

மையல் செய்து என்னை மனம் கவர்ந்தானே என்னும்
மா மாயனே என்னும்
செய்ய வாய் மணியே என்னும்
தண் புனல் சூழ் திருவரங்கத்து உள்ளாய் என்னும்
வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில் ஏந்தும்
விண்ணோர் முதல் என்னும்
பை கொள் பாம்பணையாய் இவள் திறத்து அருளாய்
பாவியேன் செயற்பாலதுவே [7.2.6] [3469]

பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்
பற்றிலார் பற்ற நின்றானே
கால சக்கரத்தாய் கடல் இடம் கொண்ட
கடல்வண்ணா கண்ணனே என்னும்
சேல் கொள் தண் புனல் சூழ் திருவரங்கத்தாய் என்னும்
என் தீர்த்தனே என்னும்
கோல மா மழைக்கண் பனி மல்க இருக்கும்
என்னுடைக் கோமளக் கொழுந்தே [7.2.7] [3470]

கொழுந்து வானவர்கட்கு என்னும்
குன்று ஏந்தி கோ நிரை காத்தவன் என்னும்
அழும் தொழும் ஆவி அனல வெவ்வுயிர்க்கும்
அஞ்சன வண்ணனே என்னும்
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும்
எங்ஙனே நோக்குகேன் என்னும்
செழுந்தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்
என் செய்கேன் என் திருமகட்கே [7.2.8] [3471]

*என் திருமகள் சேர் மார்வனே என்னும்*
*என்னுடை ஆவியே என்னும்*
*நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட*
*நிலமகள் கேள்வனே என்னும்*
*அன்று உரு ஏழும் தழுவி நீ கொண்ட*
*ஆய்மகள் அன்பனே என்னும்*
*தென் திருவரங்கம் கோயில் கொண்டானே*
*தெளிகிலேன் முடிவு இவள் தனக்கே* [7.2.9] [3472]

முடிவு இவள் தனக்கு ஒன்று அறிகிலேன் என்னும்
மூ உலகு ஆளியே என்னும்
கடி கமழ் கொன்றைச் சடையனே என்னும்
நான் முகக் கடவுளே என்னும்
வடிவுடை வானோர் தலைவனே என்னும்
வண் திருவரங்கனே என்னும்
அடி அடையாதாள் போல் இவள் அணுகி அடைந்தனள்
முகில்வண்ணன் அடியே [7.2.10] [3473]

*முகில்வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி உய்ந்தவன்*
*மொய் புனல் பொருநல்*
*துகில் வண்ணத் தூ நீர்ச் சேர்ப்பன்*
*வண் பொழில் சூழ் வண் குருகூர்ச் சடகோபன்*
*முகில்வண்ணன் அடிமேல் சொன்ன சொல் மாலை*
*ஆயிரத்து இப் பத்தும் வல்லார்*
*முகில்வண்ண வானத் திமையவர் சூழ இருப்பர்*
*பேர் இன்ப வெள்ளத்தே* [7.2.11] [3474]

***நெடுமாற்கு அடிமை செய்வேன் போல்***
***அவனை கருத அஞ்சித்து***
***தடுமாற்று அற்ற தீக்கதிகள்***
***முற்றும் தவிர்ந்த சதிர் நினைந்தால்***
***கொடு மா வினையேன் அவன் அடியார் அடியே***
***கூடும் இது அல்லால்***
***விடுமாறு என்பது என் அந்தோ***
***வியன் மூவுலகு பெறினுமே*** [8.10.1] [3662]

வியன் மூவுலகு பெறினும் போய்த்
தானே தானே ஆனாலும்
புயல் மேகம் போல் திருமேனி அம்மான்
புனை பூங்கழல் அடிக்கீழ்
சயமே அடிமை தலை நின்றார்
திருத்தாள் வணங்கி
இம்மையே பயனே இன்பம் யான் பெற்றது
உறுமோ பாவியேனுக்கே [8.10.2] [3663]

உறுமோ பாவியேனுக்கு
இவ்வுலகம் மூன்றும் உடன் நிறைய
சிறுமா மேனி நிமிர்த்த
என் செந்தாமரைக் கண் திருக்குறளன்
நறுமா விரை நாண் மலரடிக் கீழ்ப்
புகுதல் அன்றி அவன் அடியார்
சிறுமா மனிசராய் என்னை ஆண்டார்
இங்கே திரியவே [8.10.3] [3664]

இங்கே திரிந்தேற்கு இழக்கு உற்று என்
இருமா நிலம் முன் உண்டு உமிழ்ந்த
செங்கோலத்த பவள வாய்ச்
செந்தாமரைக் கண் என் அம்மான்
பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப்
புலன் கொள் வடிவென் மனத்தாய்
அங்கேய் மலர்கள் கையவாய்
வழி பட்டு ஓட அருளிலே [8.10.4] [3665]

வழி பட்டு ஓட அருள் பெற்று
மாயன் கோல மலர் அடிக்கீழ்
சுழிபட்டு ஓடும் சுடர்ச் சோதி வெள்ளத்து
இன்புற்று இருந்தாலும்
இழிபட்டு ஓடும் உடலினில் பிறந்து
தன் சீர் யான் கற்று
மொழிபட்டு ஓடும் கவி அமுதம்
நுகர்ச்சி உறுமோ முழுதுமே [8.10.5] [3666]

நுகர்ச்சி உறுமோ மூவுலகின்
வீடு பேறு தன் கேழில்
புகர்ச் செம் முகத்த களிறட்ட
பொன் ஆழிக் கை என் அம்மான்
நிகர்ச் செம்பங்கி எரி விழிகள்
நீண்ட அசுரர் உயிர் எல்லாம்
தகர்த்து உண்டு உழலும் புட்பாகன்
பெரிய தனி மாப் புகழே [8.10.6] [3667]

தனி மாப் புகழே எஞ்ஞான்றும்
நிற்கும் படியாத் தான் தோன்றி
முனி மாப் பிரம முதல்வித்தாய்
உலகம் மூன்றும் முளைப்பித்த
தனி மாத் தெய்வத் தளிர் அடிக்கீழ்ப்
புகுதல் அன்றி அவன் அடியார்
நனி மாக் கலவி இன்பமே
நாளும் வாய்க்க நங்கட்கே [8.10.7] [3668]

நாளும் வாய்க்க நங்கட்கு
நளிர் நீர்க் கடலைப் படைத்து
தன் தாளும் தோளும் முடிகளும்
சமன் இலாத பல பரப்பி
நீளும் படர் பூங் கற்பகக் காவும்
நிறை பல் ஞாயிற்றின்
கோளும் உடைய மணி மலை போல்
கிடந்தான் தமர்கள் கூட்டமே [8.10.8] [3669]

தமர்கள் கூட்ட வல்வினையை
　　நாசம் செய்யும் சதிர் மூர்த்தி
அமர் கொள் ஆழி சங்கு வாள்
　　வில் தண்டு ஆதி பல் படையன்
குமரன் கோல ஐங்கணை வேள் தாதை
　　கோதில் அடியார் தம்
தமர்கள் தமர்கள் தமர்களாம்
　　சதிரே வாய்க்க தமியேற்கே [8.10.9] [3670]

வாய்க்க தமியேற்கு
　　ஊழிதோறு ஊழி ஊழி
மா காயாம் பூக்கொள் மேனி நான்கு தோள்
　　பொன் ஆழிக்கை என் அம்மான்
நீக்கம் இல்லா அடியார் தம்
　　அடியார் அடியார் அடியார் எம் கோக்கள்
அவர்க்கே குடிகளாய்ச் செல்லும்
　　நல்ல கோட்பாடே [8.10.10] [3671]

***நல்ல கோட்பாட்டு உலகங்கள்***
　　***மூன்றின் உள்ளும் தான் நிறைந்த***
***அல்லிக் கமலக் கண்ணனை***
　　***அந்தண் குருகூர்ச் சடகோபன்***
***சொல்லப் பட்ட ஆயிரத்துள்***
　　***இவையும் பத்தும் வல்லார்கள்***
***நல்ல பதத்தால் மனை வாழ்வர்***
　　***கொண்ட பெண்டிர் மக்களே*** [8.10.11] [3672]

***மாலை நண்ணித்***
***தொழுது எழுமினோ வினை கெட***
***காலை மாலை***
***கமல மலர் இட்டு நீர்***
***வேலை மோதும் மதிள் சூழ்***
***திருக்கண்ண புரத்து***
***ஆலின் மேல் ஆல் அமர்ந்தான்***
***அடி இணைகளே*** [9.10.1] [3772]

கள் அவிழும் மலர் இட்டு
நீர் இறைஞ்சுமின்
நள்ளி சேரும் வயல் சூழ்
கிடங்கின் புடை
வெள்ளீ ஏய்ந்த மதிள் சூழ்
திருக்கண்ண புரம் உள்ளி
நாளும் தொழுது எழுமினோ
தொண்டரே [9.10.2] [3773]

தொண்டர் நும் தம்
துயர் போக நீர் ஏகமாய்
விண்டு வாடா மலர் இட்டு
நீர் இறைஞ்சுமின்
வண்டு பாடும் பொழில் சூழ்
திருக்கண்ண புரத்து அண்ட வாணன்
அமரர் பெருமானையே [9.10.3] [3774]

மானை நோக்கி
மடப் பின்னை தன் கேள்வனை
தேனை வாடா மலர் இட்டு
நீர் இறைஞ்சுமின்
வானை உந்தும் மதிள் சூழ்
திருக்கண்ண புரம்
தான் நயந்த பெருமான்
சரணம் ஆகுமே [9.10.4] [3775]

சரணம் ஆகும்
தன தாள் அடைந்தார்க்கு எல்லாம்
மரணம் ஆனால்
வைகுந்தம் கொடுக்கும் பிரான்
அரண் அமைந்த மதிள் சூழ்
திருக்கண்ண புரம் தரணியாளன்
தனது அன்பர்க்கு அன்பு ஆகுமே [9.10.5] [3776]

அன்பன் ஆகும்
தன தாள் அடைந்தார்க்கு எல்லாம்
செம் பொனாகத்து
அவுணன் உடல் கீண்டவன்
நன் பொன் ஏய்ந்த மதிள் சூழ்
திருக்கண்ண புரத்து அன்பன்
நாளும் தன்
மெய்யர்க்கு மெய்யனே [9.10.6] [3777]

மெய்யன் ஆகும்
விரும்பித் தொழுவார்க்கு எல்லாம்
பொய்யன் ஆகும்
புறமே தொழுவார்க்கு எல்லாம்
செய்யில் வாளை உகளும்
திருக்கண்ண புரத்து ஐயன்
ஆகத்து அணைப்பார்கட்கு அணியனே [9.10.7] [3778]

அணியன் ஆகும்
தன தாள் அடைந்தார்கு எல்லாம்
பிணியும் சாரா
பிறவி கெடுத்தாளும்
மணி பொன் ஏய்ந்த மதிள் சூழ்
திருக்கண்ண புரம் பணி மின்
நாளும் பரமேட்டி தன் பாதமே [9.10.8] [3779]

பாதம் நாளும்
பணியத் தணியும் பிணி
ஏதம் சாரா
எனக்கேல் இனியென் குறை
வேத நாவர் விரும்பும்
திருக்கண்ண புரத்து ஆதியானை
அடைந்தார்க்கு அல்லல் இல்லையே [9.10.9] [3780]

இல்லை அல்லல்
எனக்கேல் இனி என் குறை
அல்லி மாதர் அமரும்
திருமார்பினன்
கல்லில் ஏய்ந்த மதிள் சூழ்
திருக்கண்ண புரம் சொல்ல
நாளும் துயர் பாடு சாராவே [9.10.10] [3781]

*பாடு சாரா*
*வினை பற்றற வேண்டுவீர்*
*மாடநீடு*
*குருகூர்ச் சடகோபண்*
*சொல் பாடலான தமிழ்*
*ஆயிரத்துள் இப்பத்தும் பாடியாடி*
***பணி மின் அவன் தாள்களே*** [9.10.11] [3782]

***சூழ் விசும்பணி முகில்***
***தூரியம் முழக்கின***
***ஆழ் கடல் அலை திரைக்***
***கை எடுத்து ஆடின***
***ஏழ் பொழிலும்***
***வளம் ஏந்திய என் அப்பன்***
***வாழ் புகழ் நாரணன்***
***தமரைக் கண்டு உகந்தே*** [10.9.1] [3871]

நாரணன் தமரைக் கண்டு உகந்து
நன்னீர் முகில்
பூரண பொற்குடம்
பூரித்தது உயர் விண்ணில்
நீர் அணி கடல்கள்
நின்று ஆர்த்தன
நெடு வரைத் தோரணம் நிரைத்து
எங்கும் தொழுதனர் உலகே [10.9.2] [3872]

தொழுதனர் உலகர்கள்
தூபநல் மலர் மழை பொழிவனர்
பூமி அன்று அளந்தவன் தமர் முன்னே
எழுமின் என்று இருமருங்கு இசைத்தனர்
முனிவர்கள்
வழி இது வைகுந்தற்கு என்று
வந்து எதிரே [10.9.3] [3873]

எதிர் எதிர் இமையவர்
இருப்பிடம் வகுத்தனர்
கதிரவர் அவர் அவர்
கைந்நிரை காட்டினர்
அதிர் குரல் முரசங்கள்
அலை கடல் முழக்கு ஒத்த
மது விரி துழாய் முடி
மாதவன் தமர்க்கே [10.9.4] [3874]

மாதவன் தமர் என்று
வாசலில் வானவர்
போதுமின் எமது இடம்
புகுதுக என்றலும்
கீதங்கள் பாடினர்
கின்னரர் கெருடர்கள்
வேத நல் வாயவர்
வேள்வியுள் மடுத்தே [10.9.5] [3875]

வேள்வியுள் மடுத்தலும்
விரை கமழ் நறும் புகை
காளங்கள் வலம்புரி
கலந்து எங்கும் இசைத்தனர்
ஆள்மின்கள் வானகம்
ஆழியான் தமர் என்று
வாள் ஒண் கண் மடந்தையர்
வாழ்த்தினர் மகிழ்ந்தே [10.9.6] [3876]

மடந்தையர் வாழ்த்தலும்
மருதரும் வசுக்களும்
தொடர்ந்து எங்கும்
தோத்திரம் சொல்லினர்
தொடுகடல் கிடந்த எம் கேசவன்
கிளர் ஒளி மணி முடி
குடந்தை எம் கோவலன்
குடி அடியார்க்கே [10.9.7] [3877]

குடி அடியார் இவர்
கோவிந்தன் தனக்கு என்று
முடியுடை வானவர்
முறை முறை எதிர் கொள்ள
கொடியணி நெடு மதிள்
கோபுரம் குறுகினர்
வடிவுடை மாதவன்
வைகுந்தம் புகவே [10.9.8] [3878]

வைகுந்தம் புகுதலும்
 வாசலில் வானவர்
வைகுந்தன் தமர் எமர்
 எமது இடம் புகுதென்று
வைகுந்தத்து அமரரும்
 முனிவரும் வியந்தனர்
வைகுந்தம் புகுவது
 மண்ணவர் விதியே [10.9.9] [3879]

விதிவகை புகுந்தனர் என்று
 நல் வேதியர்
பதியினில் பாங்கினில்
 பாதங்கள் கழுவினர்
நிதியும் நற் சுண்ணமும்
 நிறை குட விளக்கமும்
மதி முக மடந்தையர்
 ஏந்தினர் வந்தே [10.9.10] [3880]

***வந்தவர் எதிர் கொள்ள***
 ***மா மணி மன்டபத்து***
***அந்தமில் பேர் இன்பத்து***
 ***அடியரோடு இருந்தமை***
***கொந்தலர் பொழில்***
 ***குருகூர்ச் சடகோபன்***
***சொல் சந்தங்கள் ஆயிரத்து***
 ***இவை வல்லார் முனிவரே*** [10.9.11] [3881]

*முனியே நான் முகனே*
*முக்கண்ணப்பா*
*என் பொல்லாக் கனிவாய்த்*
*தாமரைக் கண் கரு மாணிக்கமே என் கள்வா*
*தனியேன் ஆர் உயிரே*
*என் தலைமிசையாய் வந்திட்டு*
*இனி நான் போகல் ஒட்டேன்*
*ஒன்றும் மாயம் செய்யேல் என்னையே* [10.10.1] [3882]

மாயம் செய்யேல் என்னை
உன் திருமார்வத்து மாலை நங்கை
வாசம் செய் பூங்குழலாள்
திருவாணை நின்னாணை கண்டாய்
நேசம் செய்து உன்னோடு என்னை
உயிர் வேறின்றி ஒன்றாகவே
கூசம் செய்யாது கொண்டாய்
என்னைக் கூவிக் கொள்ளாய் வந்தந்தோ [10.10.2] [3883]

கூவிக் கொள்ளாய் வந்தந்தோ
என் பொல்லாக் கரு மாணிக்கமே
ஆவிக்கு ஓர் பற்றுக்கொம்பு
நின்னலால் அறிகின்றிலேன் யான்
மேவித் தொழும் பிரமன் சிவன்
இந்திரன் ஆதிக்கு எல்லாம்
நாவிக் கமல முதல் கிழங்கே
உம்பர் அந்ததுவே [10.10.3] [3884]

உம்பர் அம் தண் பாழேயோ
அதனுள் மிசை நீயேயோ
அம்பரம் நல் சோதி
அதனுள் பிரமன் அரன் நீ
உம்பரும் யாதவரும் படைத்த
முனிவன் அவன் நீ
எம்பரம் சாதிக்கல் உற்று
என்னைப் போர விட்டிட்டாயே [10.10.4] [3885]

போர விட்டிட்டு என்னை
நீ புறம் போக்கல் உற்றால்
பின்னை யான் ஆரைக் கொண்டு எத்தை அந்தோ
எனது என்பது என் யான் என்பது என்
தீர இரும்பு உண்ட நீர் அது போல
என் ஆர் உயிரை ஆரப் பருக
எனக்கு ஆரா அமுது ஆனாயே [10.10.5] [3886]

எனக்கு ஆரா அமுதாய்
எனது ஆவியை இன் உயிரை
மனக்கு ஆராமை மன்னி உண்டிட்டாய்
இனி உண்டொழியாய்
புனக் காயா நிறத்த
புண்டரீகக் கண் செங்கனிவாய்
உனக்கு ஏற்கும் கோல மலர்ப் பாவைக்கு
அன்பா என் அன்பேயோ [10.10.6] [3887]

***கோல மலர்ப் பாவைக்கு அன்பாகிய***
***என் அன்பேயோ***
***நீல வரை இரண்டு பிறை கவ்வி***
***நிமிர்ந்தது ஒப்ப***
***கோல வராகம் ஒன்றாய்***
***நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்***
***நீலக் கடல் கடைந்தாய்***
***உன்னைப் பெற்று இனிப் போக்குவனோ*** [10.10.7] [3888]

பெற்று இனிப் போக்குவனோ
உன்னை என் தனிப் பேருயிரை
உற்ற இருவினையாய்
உயிராய்ப் பயனாய் அவையாய்
முற்ற இம் மூவுலகும்
பெரும் தூறாய்த் தூற்றில் புக்கு
முற்றக் கரந்து ஒளித்தாய்
என் முதல் தனி வித்தேயோ [10.10.8] [3889]

முதல் தனி வித்தேயோ
முழு மூவுலகு ஆதிக்கு எல்லாம்
முதல் தனி உன்னை உன்னை
எனை நாள் வந்து கூடுவன் நான்
முதல் தனி அங்கும் இங்கும்
முழு முற்றுறு வாழ் பாழாய்
முதல் தனி சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த
முடிவிலீயோ [10.10.9] [3890]

*சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த*
*முடிவில் பெரும் பாழேயோ*
*சூழ்ந்து அதனில் பெரிய*
*பர நல் மலர் சோதீயோ*
*சூழ்ந்து அதனில் பெரிய*
*சுடர் ஞான இன்பமேயோ*
*சூழ்ந்து அதனில் பெரிய*
*என் அவாவறச் சூழ்ந்தாயே* [10.10.10] [3891]

*அவாவறச் சூழ்*
*அரியை அயனை அரனை அலற்றி*
*அவாவற்று வீடு பெற்ற*
*குருகூர்ச் சடகோபன் சொன்ன*
*அவாவில் அந்தாதிகளால்*
*இவை ஆயிரமும்*
*முடிந்த அவாவில் அந்தாதி இப்பத்து அறிந்தார்*
*பிறந்தார் உயர்ந்தே* [10.10.11] [3892]